# DEPOSITION OF WITNESS
# UNDER CODE OF CRIMINAL PROCEDURE

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | **ஜயம்மாள்** |
| **Father's Name** | **:** | **க/பெ பழனியப்பன்** |
| **Age** | **:** | **40** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-01-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் நாகாலம்மன் கோம்பை கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது மகன் கார்த்திக் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு தருமபுரி வருவதற்காக, Yamaha இருசக்கர வாகனத்தில் வெற்றிவேல் என்பவருடன் சென்றார். வெற்றிவேல் பின்னால் அமர்ந்து சென்றார். பகல் 09.30 மணிக்கு, நல்லம்பள்ளியில் இருந்து பொம்மிடி செல்லும் சாலையில் ஆஞ்சநேயர் கோவில் அருகே வந்தபோது, டிப்பர் வாகனம் மோதி விபத்திற்கு உள்ளாகிவிட்டதாக, பசுபதி என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்தில் பார்வையிட்டபோது எனது மகன் கார்த்திக் என்பவருக்கு அடிபட்டு, அதேபோல் வெற்றிவேலுவிற்கும் அடிபட்டு, உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே இருவரும் இறந்துவிட்டார்கள். இதுதொடர்பாக நான் தருமபுரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையதுதான். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு படித்து காண்பித்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இதுசம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :

எனக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் கைரேகை வைத்த அ.சா.ஆ.1ல் என்ன உள்ளது என தெரியாது என்றால் சரிதான். காலை 09.30 மணிக்கு எனது மகன் கார்த்திக் வீட்டிலிருந்து சென்றார். எனது வீட்டிலிருந்து வெற்றிவேல் வீடு சுமார் ஒரு கி.மீ. தொலைவு உள்ளது. எனது மகன் ஓட்டிய இருசக்கர வாகனம் என்னுடைய உறவினருக்கு சொந்தமானது. என் மகன் இரவலாக வாங்கி சென்றார். அவருக்கு சொந்தமானது அல்ல. விபத்தின்போது எனது மகனுக்கு 19 வயது ஆகும். விபத்தின்போது எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எங்களது வீட்டிலிருந்துதான் வெற்றிவேலுவும், எனது மகனும் கிளம்பி சென்றார்கள். இருவரும் 09.30 மணிக்கு கிளம்பி சென்ற பிறகு, 10.00 மணிக்கு விபத்து தொடர்பாக எனக்கு தகவல் வந்துவிட்டது. எங்கள் வீட்டில் இருந்து விபத்து நடைபெற்றதாக கூறப்படும் இடமானது எவ்வளவு தொலைவு உள்ளது என்றால், எனக்கு சரியாக தெரியவில்லை. எனது வீட்டிலிருந்து அரை மணி நேரம் பயணம் செய்யக்கூடிய தொலைவில்தான் விபத்து நடந்த இடம் இருந்தது. விபத்து சம்பவம் குறித்து எனக்கு தகவல் கிடைத்து சம்பவ இடம் சென்று

பார்த்தபோது அங்கு போலீசார் இருந்தார்கள். நான் சென்றபிறகுதான் சடலங்களை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அ.சா.ஆ.1ல் உள்ள கைரேகை காவல் நிலையத்தில் வைத்துதான் பெறப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு சடலங்களை கொண்டு சென்றபோது நானும் சென்றேன். அங்கு பிரேத பரிசோதனை முடிக்கும்வரை நானும் அங்கு இருந்தேன். பிறகு பரிசோதனை முடித்து உடலை வழங்கிய பிறகு வீட்டிற்கு சென்றுவிட்டு, அதன் பிறகுதான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால் சரிதான். என் மகன் வீட்டிலிருந்து கிளம்பும்போது தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்று நான் கவனிக்கவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

| |
|---|
| **திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.** |

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.01.21 17:11:05 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW2** |
| **Name** | **:** | **பச்சியப்பன்** |
| **Father's Name** | **:** | **த/பெ சண்முகம்** |
| **Age** | **:** | **55** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-01-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் நாகாலம்மன் கோம்பை கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கார்த்திக் எனது தம்பி மகன். வெற்றிவேல் அவர் நண்பர். சுமார் ஆறு மாதங்களுக்கு, நான் வியாபாரத்திற்காக இருசக்கர வாகனத்தில் சென்றேன். அப்போது அந்த வழியாக வந்தவர்கள், எனது தம்பி மகன் கார்த்திக் மற்றும் மற்றொருவர் டிப்பர் மோதி விபத்தில் சிக்கிவிட்டதாக தகவலை சொன்னார்கள். நான் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்தில் சென்று பார்த்தேன். கார்த்திக்கின் தலை, உடம்பு, கை கால் அடிப்பட்டும், வெற்றிவேல் கை, கால் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்து கிடந்தார்கள். பின்பு போலீசார் மற்றும் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். போலீசார் என்னை இதுசம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :

சம்பவம் குறித்து நேரடியாக எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி கேள்விப்பட்டுதான் சென்றேன். சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு போலீசார் இல்லை. நான் சம்பவ இடம் சென்றபோது கார்த்திக்கின் தாயார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். சம்பவ இடத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் இருந்ததா என்றால், அங்கிருந்து ஒரு கி.மீ. தொலைவில் இருந்தது. சம்பவ இடத்தில் இறந்த உடல்கள் மற்றும் அவர்களின் இருசக்கர வாகனம் மட்டுமே இருந்தது.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.01.21 17:11:16 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW3** |
| **Name** | **:** | **பசுபதி** |
| **Father's Name** | **:** | **த/பெ பச்சையப்பன்** |
| **Age** | **:** | **28** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-01-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் நாகாலம்மன் கோம்பை கிராமத்தில் குடியிருந்து பால்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 19.06.2025 வியாழன் காலை நான் பால்கடையில் இருந்தபோது, பக்கத்து வீட்டு பையன் என்னிடம் வந்து, என்னுடைய சித்தப்பா மகன் கார்த்திக்கிற்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார். அதன் பேரில் சம்பவ இடம் சென்றேன். ஆஞ்சநேயர் கோவில் அருகே 2 கி.மீ. தள்ளி சென்று பார்த்தேன். அங்கு வெற்றிவேல் மீது சக்கரம் ஏறி உடல் நசுங்கி உயிரிழந்து இருந்தார். கார்த்திக்கும் அடிப்பட்டு உயிரிழந்து கிடந்தார். போலீசாருக்கு தகவல் தெரிவித்தோம். பின்பு போலீசார் அங்கு வந்தார்கள். பின்பு பிரைவேட் ஆம்புலன்சில் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு பிரேத பரிசோதனை முடித்து, உடல்களை ஒப்படைத்தார்கள். டிப்பர் லாரியை காவல் நிலையத்தில் அங்கிருந்தவர்கள் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை இதுசம்பந்தமாக விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது)**

கடந்த 19.06.2025ஆம் தேதி காலை 10.10 மணியளவில் முத்தம்பட்டி – பாகல்பட்டி செல்லும் சாலையில் ஆஞ்சநேயர் கோவிலில் இருந்த 2 கி.மீ. தூரத்தில், மேற்கு பக்கம் உள்ள ஆத்துப்பள்ளம் பகுதியில் பெரியாண்டிச்சி கோவில் அருகே, கார்த்திக் என்பவர் TN29–BL–4726 என்ற பதிவெண் கொண்ட Yamaha R15 என்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் வெற்றிவேல் என்பவரை அமர வைத்துக் கொண்டு, பாகல்பட்டி நோக்கி, சாலையின் இடதுபுறமாக ஓட்டிச் சென்றபோது, அதே சாலையில் அவருக்கு எதிர் திசையில் ஆஜர் எதிரி TN28–BJ–9614 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, கார்த்திக் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்து விட்டு, மேற்கண்ட சங்கதிகளை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.01.21 17:11:26 +0530

**சாட்சியின் கையொப்பம்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

## DEPOSITION OF WITNESS
## UNDER CODE OF CRIMINAL PROCEDURE

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW4** |
| **Name** | **:** | **சசிகலா** |
| **Father's Name** | **:** | **க/பெ மகேந்திரன்** |
| **Age** | **:** | **42** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-01-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நாகாலம்மன் கோம்பை கிராமத்தில் குடியிருந்து வீட்டு வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வெற்றிவேல் என்ற நபர் எனது மகன். கார்த்திக் எனது உறவினர். சுமார் ஏழு மாதங்களுக்கு முன்பு கார்த்திக்கும், எனது மகன் வெற்றிவேலுவும் இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். கார்த்திக்கின் அம்மா ஐயம்மாள் என்பவர் என்னிடம் அவரது மகனும், எனது மகனும் சென்ற இருசக்கர வாகனம் விபத்திற்குள்ளானதாக சொன்னார். விபத்து நடந்த ஆஞ்சநேயர் கோவில் அருகே சென்று பார்த்தபோது, வெற்றிவேல் டிப்பர் லாரி சக்கரம் ஏறி இறங்கி நசுங்கி இறந்துவிட்டார். கார்த்திக் என்பவரும் காயமடைந்து இறந்துவிட்டார். ஆம்புலன்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை இதுசம்பந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை இல்லை என கூறப்பட்டது.

| |
|---|
| **திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.** |

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.01.21 17:11:36 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**